

கிருஷ்ணகிரியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பி.டி. அன்பரசன் புதல்வர் வழக்கறிஞர் உதயராஜ் – பவித்ரா தம்பதியினர் உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணியிடம் வாழ்த்துப் பெற்றனர். மாவட்டச் செயலாளர்கள் டி. மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

## பெரியார் விருது பெறும் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பாராட்டு!

# முதல்வர் தலைமையிலான கழக அரசின் சாதனைகளை மகளிரிடம் கொண்டு செல்வோம்!

## தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 6 -

தி.மு.க. மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, பிரச்சார குழு செயலாளர்கள், வலைதள பொறுப்பாளர்கள், ஆலோசனை குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (4.9.2025) மாலை 4.00 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன் தலைமையில் மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப இராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில நிர்வாகிகள் அங்கயற்கண்ணி, சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, அமலு விஜயன், ராணி ரவிச்சந்திரன், விஜிலா சத்தியானந்த், யாழினி, ரத்னா லோகேஸ்வரன், வாசுகி ரமணன், தேன்மொழி, சத்யா பழனிக்குமார், டாக்டர் மாலதி, மாலதி நாகராஜ், ரியா, உமா மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதுபோது நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்" என்றார் வான்புகழ் வள்ளுவர்,

அதற்கொப்ப, யார் யாருக்கு எது பொருத்தம், எவருக்கு ஒரு பொறுப்பினைத் தந்தால், அதைச் செவ்வனே நிறைவேற்றுவார் என பகுத்தறிந்து பார்த்து முடிவு செய்யும் ஆற்றலுக்குச் சொந்தக்காரர் நம்முடைய திராவிடல் மாடல் அரசின் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞரின் முத்தான மகள் கனிமொழியை, கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராக்கி, கழக மகளிர் அணிக்கு பெருமை சேர்த்தார் நம் கழகத் தலைவர். அது மட்டுமின்றி, துணைப் பொதுச்செயலாளர் ஆனாலும், தொடர்ந்து மகளிர் அணியை வழிநடத்தும் பொறுப்பினையும் தந்தார்.

இப்பொழுதோ, அனைத்துக்கும் மேலாக "பெரியார் விருதினை" இந்த முப்பெரும் விழாவில் கனிமொழிக்கு என்று அறிவித்திருக்கிறார். கனிமொழியைப் பற்றி நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும். அவர் மேடையில் பேசும்போது மட்டுமல்ல, மேடையை விட்டு கீழே இறங்கினாலும், அவர் நூற்றுக்கு நூறு பெரியாரை பின்பற்றுபவர் என்பது. இதை நன்கு அறிந்த காரணத்தால்தான், தன் தங்கை கனிமொழிக்கு "பெரியார் விருது" என அறிவித்து பெருமை சேர்த்திருக்கிறார் நம் கழகத் தலைவர் முதுலாமைச்சர் அவர்கள். அவருக்கு மகளிர் அணி சார்பில் உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று சென்னை - நாளை தூத்துக்குடி - அதற்கடுத்த நாள் டெல்லி இதற்கிடையில் பல்வேறு ஊர்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் என ஓயாமல் சுற்றிச் சுழன்று ஆற்றிக் கொண்டிருக்கும் கழகப் பணிகள், இலக்கியப் பணிகள், சமூகப் பணிகள் என ஓயாத உழைப்பு.

தமிழர்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்தில் கர்ஜனை. அதேநேரம் இந்திய எல்லையில் பஹல்காமில் தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிநாட்டவர்க்கு விளக்க இந்தியப் பிரதிநிதியாக பல நாடுகளுக்குப் பயணம், தன் தூத்துக்குடி தொகுதியில் விமான நிலையத்தின் விரிவாக்கம், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைவதற்கு பல்லாண்டு காலமாக தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததன் காரணமாக, தற்போது செயல் வடிவம் பெற்றுள்ளது.

வரலாறு காணாத வெள்ளம் தூத்துக்குடியை சூழ்ந்த நேரத்தில், தன் உயிரையும் பொருட்படுத்தாது, களத்தில் இறங்கி மக்களைக் காத்த தாயுள்ளம் கொண்டவர். சமூக நீதி, பெண்ணுரிமை போன்ற தலையாயப் பிரச்சினைகளுக்காக தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்.

தன்னுடைய தூத்துணக்குடி தொகுதியில் அரும்பெரும் முயற்சியால் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தூத்துக்குடியில் வின்பாஸ்ட் மின்சார கார் உற்பத்தி ஆலை தமிழ்நாடு முதமைச்சர் அவர்களால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கவையாகும்.

வருகிற செப்டம்பர்17 அன்று கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் "பெரியார் விருது" பெறும் கழக துணைப் பொதுச்செயலாளர் - நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்களுக்கு தி.மு.க. மகளிர் அணி தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்வதோடு, மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான கழக அரசு செய்துள்ள சாதனைகள் எண்ணிலடங்கா. அதிலும், குறிப்பாக மகளிருக்காக கழக ஆட்சி செய்திருக்கும் சாதனைகள் பலப்பல. குறிப்பாக சில வற்றை சொல்வதெனில்,

1) மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் ஆயிரம்.

2) மகளிருக்கு இலவச பேருந்து பயணம்

3) பணிபுரியும் மகளிர் தங்க "தோழி" விடுதிகள்.

4) தமிழகம் முழுவதும் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச காலை சிற்றுண்டி

5) மூத்த மகளிர்க்கு இல்லம் தேடிச் சென்று ரேஷன் பொருட்கள் வழங்குதல்.

6) பெண்கள் உயர்கல்விக்காக மாதம் ரூ.1000/-

இவற்றையெல்லாம் தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் ஒவ்வொருவர் இடத்திலும் கொண்டு சேர்ப்பதோடு, கழக அரசுக்கு மகளிரின் மேலான ஆதரவைத் திரட்ட வேண்டும்.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டி நம் திராவிட மாடல் அரசின் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மகளிருக்காக செய்துள்ள சாதனைகள் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் தி.மு.க. மகளிர் அணியின் பங்கு மிகவும் முக்கி யத்துவம் வாய்ந்தது.

இவற்றையெல்லாம் மனதில் நிறுத்தி, நம் மகளிர் அணி நிர்வாகிகள் செயலாற்றி, மீண்டும் கழக ஆட்சி மலர்ந்து இரண்டாவது முறையாக கழகத் தலைவர் தளபதி அவர்களின் முதலமைச்ச ராக்க பாடுபட உறுதியேற்போம்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் மற்றும் கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்**

அமைப்பாளர் - மேரி 53/பி, 9வது தாமஸ் தெரு, பெருமாள்புரம், திருநெல்வேலி - 627007.

துணை அமைப்பாளர்கள் – 1) இந்திரா இ6-1, உலகம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை - 627002. 2) மாரியம்மாள் திருநெல்வேலி. 3) சின்னத்தாய் 3ஏ, காந்தி நகர் 5வது தெரு, பாளையங்கோட்டை - 627002. 4) டி. சகாய ஜீலியட் மேரி எம்.ஐ.ஜி. 1886, மகிழ்ச்சி நகர், பாளையங்கோட்டை - 627007. 5) சுப்புலெட்சுமி 2-1, திருஞான சம்பந்த நாயனார் தெரு, பாளையங்கோட்டை. 6) சித்ரா பௌர்ணமி 19, செந்தில் நகர், பாளையங்கோட்டை- 627002

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்**

அமைப்பாளர் – சீதாலெட்சுமி 3எச்1/2, புதுக்கிராமம் சுந்தர விநாயகர் கோவில் தெரு, பேட்டை - 627004.

துணை அமைப்பாளர்கள் - 1) சுப்புலெட்சுமி 40ஏ, தடிவீரன் கோவில் கீழத் தெரு, திருநெல்வேலி டவுன் - 627006. 2) ராஜேஸ்வரி 121, வினைதீர்த்த விநாயகர் கோவில் தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) கோமதி 71-1, செக்கடி தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 4) பிஸ்மி சகர்பானு எம்.ஜி.பி. 4வது வடக்கு தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004.

**கோவை வடக்கு மாவட்டம்**

கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி லதா அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **திருமதி ஆர்.சுமதி** (காரமடை ரோடு, மேட்டுப்பாளையம், கோவை) அவர்கள், கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-09-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி



தர்மபுரி மாவட்டம்,கொட்டுமாரனஹள்ளியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஷ், மற்றும் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தர்மபுரி தி.மு.க. கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்து பெறப்பட்ட மனுக்களில் அன்றைய தினமே தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் எம்வீடி.கோபால், பச்சியப்பன், ஏ.எஸ்.சண்முகம், வழக்கறிஞர் அணி சந்திரசேகர், மற்றும் தி.மு.க.வினர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம், சன்னியாசிகுண்டு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மலைப்பாதை சீரமைத்தல் மற்றும் கோவில் திருமதில் அமைக்கும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (04.09.2025) தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, அறங்காவலர்கள் குழுத்தலைவர் ஏ.ஏ.ஆறுமுகம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி வே.சபர்மதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில்

# இளநிலை - முதுநிலை பாடப்பிரிவுகளுக்கான மாணாக்கர் சேர்க்கை!

## இணையதள விண்ணப்பப்பதிவு வசதி செப்.30-ந் தேதி வரை செயல்படும்!

## அமைச்சர் கோவி. செழியன் தகவல்!



சென்னை, செப்.6-

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளுக்கான மாணாக்கர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப்பதிவு வசதியை 30.09.2025 வரை செயல்படவுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

ஏழை, எளிய மாணாக்கர்கள் உயர்கல்வியினை பெற நிதி ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கோடு புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் மூலம் அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர் அவர்கள்.

அதுமட்டுமின்றி உயர்கல்வி பெறும் மாணாக்கர்கள் திறன் வாய்ந்தவர்களாக அவரவர் துறைகளில் முதல்வர்களாக திகழ நான் முதல்வன் திட்டம் மூலம் திறன்மேம்பாடு பயிற்சி வழங்கப்படுகிறது. இதனால் உயர்கல்வியில் மாணாக்கர் சேர்க்கை ஆர்வம் உயர்ந்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு அரசுக் கல்லூரி இல்லாத பகுதிகளில் நடப்பாண்டில் மட்டும் புதியதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி களை தொடங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவ்விடங்களில் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 15,000க்கும் மேற்பட்ட மாணாக்கர் சேர்க்கை இடங்கள் பல்வேறு பாடப்பிரிவுகளில் உருவாக்கப்பட்டன.

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைகான விண்ணப்பப் பதிவினை WWW.TNGASA.IN என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிப்பதற்கு உரிய வழிவகைகள் செய்யப்பட்டு மேற்கண்ட பாடப்பிரிவுகளில் மாணாக்கர் சேர்க்கை பெற்றுள்ளனர்.

இணையதளத்தில் விண்ணப்ப பதிவு மேற்கொள்ள தவறவிட்ட மாணாக்கர்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்குடன் விண்ணப்ப பதிவு இணையதளம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இவ்விணையதளம் 30.09.2025 வரை தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.


எனவே, இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி மாணாக்கர்கள் தாங்கள் சேர விரும்பும் மேற்கண்ட இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளில் காலியாக உள்ள இடங்களுக்கு WWW.TNGASA.IN என்ற இணையதளத்தில் 30.09.2025க்குள் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



கேரளா மாநில தி.மு.க. சார்பாக பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு நெல்லிப்புழா–பாலாட்டு ஹாலில் ஓணம் திருவிழாவினை முன்னிட்டு நலத்திட்ட வழங்கும் நிகழ்ச்சியானது நேற்று (5.09.2025) மாநிலத் தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர் முருகேசன் ஏற்பாட்டில் கேரளா மாநிலத் தி.மு.க. தலைவர் மன்னார்காடு கே.எஸ்.ரஞ்சித் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு 300க்கும் மேற்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஓணம் சத்யா விருந்தை துவக்கி வைத்து ஓணம் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார். முன்னதாக பாலக்காடு மாவட்ட கழக செயலாளர் ஜாபர் அனைவரையும் வரவேற்றார். உடன் அபுபக்கர், மாணிக்கன், பாலன், மொய்து, ஷைனி, மஜீத்,அக்பர் அல்தான், ப்ளசன் மணப்போயல், தங்கச்சன், ஜீஜி மோகன், ஜெயன் ஜிம்மி உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் க.முருகையன்
### செப்டம்பர் 6 (1997)



இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. மகளிர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி -மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர்அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் -திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்**

அமைப்பாளர் - டி.எம். சௌந்திரம் 3/எப், கிருபாகரன் தெரு, மிலிட்டரி லைன், பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் – 1) கதீஜா இக்லாம் பாசிலா 116, காஜா நாயகம் தெரு, மேலப்பாளையம். 2) காந்திமதி ஒச்சான்குளம், பெருமாள்புரம், திருநெல்வேலி. 3) ஜோஸ்வனிதா எஸ்.எப்.எல். 13, லக்கி காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி. 4) எஸ். காளிஸ்வரி 3ஏ, காந்தி நகர் 5வது தெரு, சமாதானபுரம், பாளையங்கோட்டை.

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்**

அமைப்பாளர் - அனார்கலி 23/6/1, கல்லணை தெரு, திருநெல்வேலி டவுன் - 627006.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பிந்து அந்தோணி ஆரோக்கியம் 6ஏ, ஜாமிஆ பள்ளி வாசல் தெரு திருநெல்வேலி டவுன் - 627006. 2) எஸ். ஹமிதா 23, ஆர்.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) ஆர். கிருஷ்ணவேணி 43, சாலை தெரு, மேகலிங்கபுரம், திருநெல்வேலி - 627001. 4) கீதா 5டி, மாவடி குளத்தான்கரை, தச்சநல்லூர், திருநெல்வேலி - 627358.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-09-2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர்அணி